எண்: 103 /2024 நாள்: 02/09/2024

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## எண் 3, தேர்வாணையச் சாலை, சென்னை - 600 003.

## செய்தி வெளியீடு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகளில் (நேர்முகத் தேர்வு) அடங்கிய பதவிகளுக்கான தேர்வு 12.08.2024 மு.ப., 19.08.2024 மு.ப. & பி.ப., 20.08.2024 மு.ப. & பி.ப. மற்றும் 21.08.2024 மு.ப. ஆகிய நாட்களில் கணினி வழித் தேர்வாக நடத்தப்பட்டது.

இதில் 19.08.2024 மு.ப & பி.ப, 20.08.2024 மு.ப., & பி.ப. மற்றும் 21.08.2024 மு.ப. அன்று நடந்து முடிந்த தாள் – II (20 பாடங்கள்)-க்கான உத்தேச விடைகள் தேர்வாணைய இணையதளத்தில் 02.09.2024 அன்று வெளியிடப்பட்டுள்ளன.

இந்த உத்தேச விடைகளின் மீது முறையீடு செய்ய விரும்பும் தேர்வர்கள் உத்தேச விடைகள் வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் அதாவது 09.09.2024-க்குள் தேர்வாணைய இணையதளத்தில் உள்ள “Answer key Challenge” என்ற சாளரத்தைப் பயன்படுத்தி மட்டுமே முறையீடு செய்யலாம். இதற்கான அறிவுரைகள், வழிமுறைகள் தேர்வாணைய இணையதளத்திலேயே வழங்கப்பட்டுள்ளன. அஞ்சல் வழியாகவும் மின்னஞ்சல் வழியாகவும் பெறப்படும் முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

A. ஜான் லூயிஸ், இ.ஆ.ப.,
தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்